தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓய்வு)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 32/பேரூ/2023
நாள் :11.09.2023

திரு.M. அருள்நிதி,
கடலூர். – முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
சேத்தியாத்தோப்பு பேரூராட்சி,
கடலூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், சேத்தியாத்தோப்பு அஞ்சல், கும்பகோணம் மெயின் ரோடு என்ற முகவரியில் வசிக்கும் திரு.M. அருள்நிதி என்பவரின் 03.02.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.02.2023 அன்று பெறப்பட்டு 32/பேரூ/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், சேத்தியாத்தோப்பு அஞ்சல், கும்பகோணம் மெயின் ரோடு என்ற முகவரியில் வசிக்கும் திரு.M. அருள்நிதி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், சேத்தியாத்தோப்பு பேரூராட்சியில் நடைபெறும் நிர்வாக சீர்கேடு சம்பந்தமாக கடந்த 01.08.2022 தேதியில் கடலூர் மண்டல உதவி இயக்குநர் அவர்களுக்கு அளித்த புகார் மனுவின் பெயரில் 13.09.2022 தேதியில் விசாரணை நடத்தியதில், நான் எனது வாக்குமூலத்தை பதிவு செய்து உள்ளேன். இது சம்பந்தமாக கடந்த 4 ½ மாதங்களாக மாதாமாதம் ஒப்புகையுடன் தபால் அஞ்சல் மூலமாக விசாரணை அறிக்கை மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கை கேட்டு 4 முறை கடிதம் எழுதியும் எந்தவிதமான பதிலும் கிடைக்காத நிலையில் ஒரு கணிசமான தொகையை பெற்றுக் கொண்டு சம்பந்தபட்ட செயல் அலுவலர் திரு.V.ஜெயராமன் அவர்களை பணி இடமாற்றம் செய்து எனது புகார் மனு நிலுவையிலேயே உள்ளது.

எனவே தயவுகூர்ந்து சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. கு. வெங்கடேசன் அவர்களை எனது மனு சம்பந்தமான ஆவணங்கள் அனைத்தையும்

முன்னிலைப்படுத்த உத்தரவிட்டு, எனது வாக்குமூலத்தில் கொடுக்கப்பட்ட பத்திகளுக்கு உண்டான பதில்களை மற்றும் அங்கீகாரமே இல்லாத பேருந்து நிலையத்தில் இயங்கி கொண்டு இருக்கும் கடைகளில் ஏலம் விடுதல் 15% கூடுதல் வாடகை பெற்று புதுப்பித்தல் செய்திருப்பது எந்த சட்ட அடிப்படையில் நடைபெற்றது என்பதற்கான எழுத்துப் பூர்வமான பதிலை பெற்று தரவும் மற்றும் விசாரணை விரைந்து முடித்து நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக் கொள்கிறேன்."

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விளக்க அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 14.02.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் சேத்தியாத்தோப்பு பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) சேத்தியாத்தோப்பு பேரூராட்சி செயல் அலுவலர் தனது 02.06.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு பேரூராட்சியின் மக்கள் தொகை சுமார் 12437 ஆகும். இப்பேரூராட்சியில் பேருந்து நிலையமானது புதிதாக அமைக்கப்பட்டு அதில் 1 முதல் 23 மற்றும் 1 முதல் 14 என இருபிரிவுகளாக கடைகளும் கட்டப்பட்டது.

புதியதாக கட்டப்பட்ட 1 முதல் 23 கடைகளும் 2001–2002ம் ஆண்டு ஏலம் விடப்பட்டது. 2001–2002ம் ஆண்டு ஏலம் விடப்பட்ட 1 முதல் 22 கடைகளுக்கும் நடப்பு வருடம் அதாவது 2022–2023 வரை புதுப்பித்தல் செய்யப்பட்டுள்ளது. இதில் மனுதாரர் குத்தகை எடுத்துள்ள 23–ம் எண்ணுடைய (உணவகம்) கடை மட்டும் 2009–2010 ஆண்டில் வாடகை தொகை உரிய காலத்திற்குள் செலுத்தாத காரணத்தினால் பேரூராட்சி நிர்வாகத்தால் கடை ஜப்தி செய்யப்பட்டது.

பிறகு ஜப்தி செய்யப்பட்ட கடை எண் 23–ஐ 05.02.2010 அன்று ஏலம் விடப்பட்டதில் மேற்படி மனுதாரரே மீண்டும் 23–ம் எண் கடையை எடுத்து 2021–2022 வரை அதாவது மறு ஏலம் எடுக்கப்பட்டதிலிருந்து 12 வருடங்கள் புதுப்பித்தல் செய்து கடை நடத்தியுள்ளார்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறையின் அரசாணை (நிலை) எண். 92, நாள் 3.7.2007–ன் படி கடைகள் ஏலம் விடப்பட்ட வருடத்திலிருந்து 9ஆண்டுகள்வரை மட்டுமே புதுப்பித்தல் செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதாலும், 2020–2021ம் ஆண்டு தணிக்கைத் தடையில் ஒரு குத்தகை இனம் ஏலம் விடப்பட்டதிலிருந்து 9 ஆண்டுகள் வரை புதுப்பித்தல் செய்ய வேண்டும் எனவும் அதன் பிறகு புதிதாக ஏலம் விடப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் திரு.ம.அருள்நிதி என்பவருக்கு 2021–2022ம் ஆண்டுடன் புதுப்பித்தல் செய்யப்பட்ட கால அளவு முடிவடைந்து விட்டது. மேலும் பேருந்து நிலையத்தில் உள்ள கடைகள் 1 முதல் 22 வரை 2022–2023ம் ஆண்டுடன் புதுப்பித்தல் காலம் முடிவடைவதால் மேற்படி 1 முதல் 22 கடைகளும் 2022–2023ம் ஆண்டு இறுதியில் ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

எனவே மனுதாரர் கடை எண் 23–க்கு 2022–2023 ஒரு ஆண்டுக்கு மட்டும் புதுப்பித்தல் செய்யப்பட்டால், 2023–2024ம் ஆண்டிற்கு பேருந்து நிலையத்தில் உள்ள

1 முதல் 23 கடைகளும் புதிதாக ஏலம் விட ஏதுவாக இருக்கும் என்ற அடிப்படையில் திரு.ம.அருள்நிதி என்பவருக்கு சேத்தியாத்தோப்பு பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபடி ஒரு வருட காலத்திற்கு (2022–2023க்கு) மட்டும் புதுப்பித்தல் செய்து அறிவிப்பு கடிதம் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறாக மனுதாரருக்கு 2022–2023 ஒரு வருடத்திற்கு மட்டும் புதுப்பித்தல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேத்தியாத்தோப்பு பேருந்து நிலையத்தில் உள்ள 1 முதல் 23 கடைகளும் 2023–2024ம் ஆண்டிற்கு பொது ஏலம் விடும் பொருட்டு இப்பேரூராட்சி மன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 24.03.2023 அன்று பொது ஏலம் நடைபெற இருப்பதாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தயார் செய்யப்பட்டு தினசரி நாளிதழில் 10.03.2023 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. பேருந்து நிலையத்தில் கடை நடத்தி வந்த நபர்களிடமும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் நேரடியாக கையொப்பம் பெறப்பட்டது என்ற விபரம் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

24.03.2023 அன்று பேரூராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற பொது ஏலத்தில் மனுதாரர் திரு. ம. அருள்நிதி என்பவர் கலந்து கொள்ளவில்லை. மேலும் பொது ஏலம் நடைபெற்றபோது கடை எண். 23–ஐ (உணவகம்) திரு. இ. விக்னேஷ் என்பவரால் உயர்ந்த ஏல கேள்வியாக மாத வாடகை ரூ.12,300/–தொகைக்கு கோரப்பட்டு ஏலம் உறுதி செய்யப்பட்டது. ஒரு வருட வாடகை தொகையும் ஏலதாரர் செலுத்திவிட்டார்.

பேந்து நிலைய கடை எண்.23–ஐ உயர்ந்த தொகைக்கு ஏலம் கோரிய நபர் திரு. இ. விக்னேஷ் என்பவருக்கு 01.04.2023 முதல் கடையை ஒப்படைக்க வேண்டும், எனினும் மனுதாரர் திரு. ம. அருள்நிதி என்பவர் கடையை பூட்டி சாவியை நாளது தேதி வரை பேரூராட்சியில் ஒப்படைக்காமல் உள்ளார். இதன் காரணமாக மேற்படி மனுதாரருக்கு சாவியை ஒப்படைக்கும்படி இரண்டு முறை பேரூராட்சி மூலம் அறிவிப்பு வழங்கபட்டுள்ளது என்ற விபரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண் 298, நாள் 02.09.2020–ன்படி கொரோனா தொற்றுநோய் காலங்களில் தொடர்ந்து ஊரடங்கு காலமான 01.04.2020 முதல் 31.05.2020 வரையிலான குத்தகை தொகையினை தள்ளுபடி செய்ய ஆணையிடப்பட்ட நிலையில் சேத்தியாத்தோப்பு பேரூராட்சி அனைத்து குத்தகை இனங்களுக்கும் 01.04.2020 முதல் 31.05.2020 வரையிலான இரண்டு மாத வாடகை தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் தவறோ, விதிமீறல்கள் எதுவும் நிகழவில்லை என்கிற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே பேருந்து நிலைய கடை எண் 23–ஐ திரு.ம. அருள்நிதி என்பவரிடமிருந்து பேரூராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைப்பு செய்ய உரிய உத்தரவு வழங்க வேண்டுமாய் கனம் நீதிபதி அவர்களிடம் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

3) இந்நிலையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோருக்கு 25.05.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**4) 25.5.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது எழுத்து பூர்வ வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

(1) கடையின் குத்தகை காலம் முடிந்த பிறகு நான் கேட்டது 3 வருட கால குத்தகை புதுப்பிப்பு. ஆனால் சட்டத்திற்கு புறம்பாக எனது கடையை மட்டும் 1 வருடத்திற்கு புதுப்பித்து, அந்த வாடகை பணம் 12 மாதத்திற்கும் 48 மணி நேரத்தில் பணம் கட்ட சொன்னது என்னுடன் கூடிய கடைகள் 1 வருடத்திற்கு ஏலம் விடப்பட்டது. சில கடைகள் 3 வருடத்திற்கு ஏலம் விடப்பட்டது. G.O.படி 9 வருடம் முடிந்த பிறகு ஏலம் விடவேண்டிய கடைகள் 2022 வருடம் வரை புதுப்பிக்கப்பட்டு உள்ளது. ஆனால் எனது கடை வரைக்கும் ஏலத்திற்கு கொண்டு வரவேண்டிய அவசியம் என்ன? போன வருடமே ஏலம் விட்டு இருந்தால் அரசுக்கு மாதம் ரூபாய் 6,000/– இலாபம் கிடைத்திருக்கும் அந்த இழப்புக்கு யார் காரணம்? அதை யாரிடம் இருந்து வசூல் செய்வது.

(2) ஒரே நேரத்தில் குத்தகை காலம் முடிவுற்ற (14 + 2+1) = 17 கடைகளில், 14 கடைகள் 3 வருடங்களுக்கு புதுப்பித்துவிட்டு, 2 கடைகளில் 1 கடை ஏலம் விட்டு, என் கடையை 1 வருடம் புதுப்பித்தது ஏன் ? மேலும் 1 கடை 3 வருடத்திற்கு புதுப்பித்தது ஏன்? இத்தனைக்கும் ஒரே போர்டு, ஒரே தலைவர், ஒரே துணை தலைவர், ஒரே செயல் அலுவலர் ஒரே A.D. இதற்கான விளக்கம் விசாரணையில் இல்லை.

(3) சிறுவணிக கடைகள் 14–ல், 6 கடைகள் அரசு அனுமதி பெறாமல் அரசாங்கம் வைத்து உள்ள Rolling Shetter-ஐ தன்விருப்பத்திற்கு அரசாங்க அனுமதி பெறாமல் 4 அடி தள்ளி வைத்து பொதுமக்களுக்கு இடையூறாக இருந்ததற்கு உரிய விளக்கம் தரப்படவில்லை.

(4) ஏலம் விடப்படும் முன்பு, ஏலம் விட்ட பிறகு கடைபிடிக்க வேண்டிய நடைமுறை சட்டங்களான 60 நாள் Notice, 30 நாள் Notice, காலிசெய்ய Notice, அதிக circulation உள்ள நாளிதழில் விளம்பரம் செய்யாதது, போதிய அவகாசம் கொடுத்து ஏலம் விடாதது சம்பந்தமாக விளக்கம் தரப்படவில்லை.

(5) கடந்த 5 வருடங்களாக பேருந்து நிலையத்திற்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அதற்கு காரணம் போதிய அங்கீகாரம் பெறத் தகுதியானதாக அந்த பேருந்து நிலையம் இல்லை. ("U" வடிவ கட்டடை, வெள்ளைஅடித்தல், கால அட்டவனை, குடிநீர்வசதி) அது பற்றிய விளக்கம் இல்லை.

(6) மேற்கண்ட காரணங்களுக்காக பேருந்து நிலையத்தில் பேருந்து வராமல், மக்கள் வராமல், வியாபாரம் இல்லாமல் நஷ்டம் அடைந்து விட்டார்கள் மேலும் கடந்த 2½ வருடங்களாக கொரானா நோய் காலத்தில் முற்றிலும் கடையே திறக்காததால் இந்த ஒரு முறை 3 வருடம் புதுப்பித்து தாருங்கள் என்பதற்கு இன்றுவரை பதில் இல்லை, விளக்கம் இல்லை.

7) எனது கைப்பட இந்த பேரூராட்சி முடக்க வேண்டிய பேரூராட்சி என்று எழுதிகொடுத்து ஆவணமும் சமர்ப்பித்தும் அது சம்பந்தமான விசாரணை நடைபெறவில்லை. பேரூராட்சி Approval வாங்காதது, எனது கடையை ஜப்தி செய்து திரும்ப கொடுத்தது "U" வடிவ கட்டடையோ சம்பாடு திட்டத்தின்கீழ் மூடிமறைத்தது.

8) எனவே உடனடியாக சம்பந்தப்பட்ட இடத்தை ஆய்வு செய்து அலுவலகம் மற்றும் பேருந்து நிலையத்தை spot visit செய்து உடனடியாக முன்னாள், இன்னாள் தலைவர்கள், E.O.க்கள், குத்தகைதாரர்களை அழைத்து விசாரணை நடத்தி எனது மனுவுக்கு தீர்வு செய்ய சொல்லியும் செய்யவில்லை.

5) எதிர்மனுதாரான சேத்தியாத்தோப்பு செயல் அலுவலர் 25.5.2023 அன்றைய விசாரணையில் ஆஜராகாமல் பிறிதொரு வாய்ப்பு அளிக்குமாறு கோரியதைத் தொடர்ந்து இம்முறைமன்ற 26.5.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் 5.6.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு சேத்தியாத்தோப்பு பேரூராடசி செயல் அலுவலருக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**6) சேத்தியாத்தோப்பு பேரூராட்சியின் செயல் அலுவலர் 05.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

மனுதாரர் திரு.அருள்நிதி என்பவர் சேத்தியாத்தோப்பு பேரூராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண் 23ஐ குத்தகைக்கு எடுத்து உணவகம் நடத்தி வந்த நிலையில் மனுதாரரின் குத்தகைக் காலம் 2021–22ம் ஆண்டுடன் புதுப்பித்தல் செய்யப்பட்ட கால அளவு முடிவடைந்துவிட்டது. 2023–24ம் ஆண்டிற்கு பேருந்து நிலையத்தில் உள்ள 23 கடைகளுக்கும் புதிதாக ஏலம் விட ஏதுவாக இருக்கும் என்கின்ற அடிப்படையில்தான் மனுதாரரின் கடையை மீண்டும் ஒரு ஆண்டிற்கு அதாவது 2022–23ம் ஆண்டிற்கு மட்டும் புதுப்பித்தல் செய்யப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பேருந்து நிலையத்தில் உள்ள 23 கடைகளுக்கும் முறைப்படி விளம்பரம் செய்யப்பட்டு 2023–2024ம் ஆண்டிற்கான பொது ஏலம் விடப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை. மேலும் மனுதாரர் நடத்தி வந்த 23 –ம் எண் கொண்ட கடை உயர்ந்த ஏலக் கேள்வியாக மாத வாடகை ரூ 12,300/–க்கு கோரப்பட்டு ஏலம் உறுதி செய்யப்பட்டு, ஏலதாரர் ஒரு வருட வாடகைத் தொகை செலுத்திவிட்டார். மேற்கண்ட 23 கடைகளை புதிதாக ஏலம் விட்டதால் முந்தைய தொகையைவிட பேரூராட்சிக்கு மேலும் சுமார் ரூ. 16.50 இலட்சம் கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மனுதாரர் தெரிவித்தவாறு பேருந்து நிலையத்திற்கான அங்கீகாரம் (D Grade) கிடைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட சேத்தியாத்தோப்பு பேருந்து நிலையத்தில் ஒரிரு பேருந்துகளை தவிர அனைத்து பேருந்துகளும் நின்று செல்கின்றன. பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளின் ஷட்டர்கள் பழுதடைந்துள்ள நிலையில், சுமார் 6 கடைகளில், கடையை நடத்தி வருபவர்களே பேரூராட்சிக்கு தகவல் தெரிவிக்காமல் ஷட்டர்களை மாற்றியுள்ளனர் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட 2.6.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (மற்றும்) விதிகளில் இம்முறைமன்ற நடுவத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:-

பிரிவு 7 " The Ombudsman shall perform all or any of the following functions namely:-

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இந்நேர்வில் மனுதாரர் திரு.ம.அருள்நிதி என்பவர் கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு பேரூராட்சியில் புதிதாகக் கட்டப்பட்ட பேருந்து நிலையத்தில் எண் 1 முதல் 23 வரையுள்ள கடைகளில் 23–ஆம் எண்ணுடைய கடையை 2001–2002ஆம் ஆண்டு குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறார். இவர் 2009–2010 ஆம் ஆண்டு குத்தகைத் தொகையை உரிய காலத்திற்குள் செலுத்தாத காரணத்தால் கடை பேரூராட்சி நிர்வாகத்தால் ஜப்தி செய்யப்பட்டுள்ளது. பின்னர் மேற்படி கடை எண் 23–ஐ ஏலம் விடப்பட்டதில் மனுதாரரே மீண்டும் ஏலம் எடுத்து 2021–2022 வரை தொடர்ந்து புதுப்பித்தல் செய்து, கடைநடத்தி வந்துள்ளார். 2020–2021ஆம் ஆண்டு தணிக்கைத்தடையில் அரசாணை(நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 19.9.2008–ன்படி ஒரு குத்தகை இனம் ஏலம்விடப்பட்ட தேதியிலிருந்து 9 ஆண்டுகள் வரை புதுப்பித்தல் செய்ய வேண்டும், அதன்பிறகு புதிதாக ஏலம் விடப்படவேண்டுமென சுட்டிக்காட்டியதன் அடிப்படையில், கடை எண் 1 முதல் 23 வரையிலான அனைத்து கடைகளுக்கும் மறுஏலம் நடத்தலாமென உத்தேசிக்கப்பட்டு, 1 முதல் 22 வரையிலான கடைகளுக்கான புதுப்பித்தல் காலம் 2022–2023ஆம் ஆண்டுடன் முடிவடைவதாலும், கடை எண் 23 மனுதாரரது கடை மட்டும் 2021–2022ஆம் ஆண்டுடன் புதுப்பித்தல் காலம் முடிவடைந்த நிலையில் அனைத்து 23 கடைகளுக்கும் ஒரேநேரத்தில் ஏலம்விட கருதப்பட்டு, மனுதாரரது கடை எண் 23 மட்டும் 2022–2023 ஒரு ஆண்டுக்கு மட்டும் புதுப்பித்தல் செய்யப்பட்டது. இதனை எதிர்த்து மனுதாரர் தமக்கு மட்டும் ஏன் ஓராண்டு புதுப்பித்தல் தரப்பட்டது என்றுபுகார் தெரிவித்து விசாரணை கோரியுள்ளார். மேலும் இது குறித்து விசாரணை மேற்கொண்ட கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் அறிக்கையை பெற்றுத் தருமாறும் கோரியுள்ளார்.

கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தமது அறிக்கையில் கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு பேரூராட்சி பேருந்து நிலைய வணிக வளாகக் கடை எண் 23க்கான குத்தகை உரிமத்தினை மூன்று ஆண்டுகளுக்கு புதுப்பித்து தராமல் பேரூராட்சி நிர்வாகத்தால் ஒரு ஆண்டுக்கு மட்டும் குத்தகையினை புதுப்பித்து தரப்பட்டுள்ளதாகவும் விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க கேட்டு வரப்பெற்ற திரு.எம்.அருள்நிதி என்பவரது புகார் மனு தொடர்பாக கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் 13.09.2022 அன்று கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் மனுதாரர் மற்றும் சேத்தியாத்தோப்பு பேரூராட்சி செயல் அலுவலரிடம் விசாரணை நடத்தப்பட்டது என்றும் கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு பேரூராட்சியில் பேருந்து நிலையத்தில் பேரூராட்சிக்கு சொந்தமான 1 முதல் 23 கடைகள் உள்ளன. 1 முதல் 23 முடிய

உள்ள கடைகளை கடந்த 2001–2002 ஆம் ஆண்டில் பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு நடப்பாண்டு வரை புதுப்பித்தல் செய்யப்பட்டுள்ளது என்றும் கடை எண். 23–ஐ மட்டும் கடந்த 2009–2010 இல் பேரூராட்சி நிர்வாகத்தால் ஜப்தி செய்யப்பட்டு 05.02.2010–ல் மறு ஏலம் விடப்பட்டு நடப்பாண்டு வரை புதுப்பித்தல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், தற்போது நடைமுறையிலுள்ள அரசாணை (நிலை) எண் 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.07.2007–ல் தெரிவித்துள்ளவாறு கடை ஏலம் விடப்பட்ட வருடத்திலிருந்து 9 ஆண்டுகள் வரை மட்டுமே புதுப்பித்தல் செய்ய இயலும் என்பதன் அடிப்படையில் மனுதாரர் திரு.ம.அருள்நிதி என்பவருக்கு 12 ஆண்டுகள் வரை புதுப்பித்தல் செய்யப்பட்டுள்ளதை சரிசெய்யும் பொருட்டு பேரூராட்சி மன்ற தீர்மான எண் 14, நாள் 11.04.2022ல் பேருந்து நிலையத்தில் உள்ள 1 முதல் 22 கடைகளும் 2022–2023ம் ஆண்டுடன் மூன்று வருட புதுப்பித்தல் செய்யப்பட்ட ஆண்டு முடிவு பெற்றுள்ளது. திரு. ம. அருள்நிதி என்பவருக்கு மட்டும் 2022–2023 ஒரு ஆண்டுக்கு புதுப்பித்தல் செய்யப்பட்டால், 2023–2024ம் ஆண்டிற்கு 1 முதல் 23 கடைகளுக்கும் சேர்த்து புதியதாக ஏலம்விட ஏதுவாக இருக்கும் என்ற அடிப்படையில் மனுதாரர் திரு.ம.அருள்நிதி என்பவருக்கு கடை எண்.23–ஐ ஒரு வருட காலத்திற்கு (2022–2023) மட்டும் புதுப்பித்தல் செய்து தரப்பட்டுள்ளது. இவ்விவரங்கள் மனுதாரருக்கு பேரூராட்சியின் 30.01.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, இந்நேர்வில் அரசாணை மற்றும் பேரூராட்சி மன்றத் தீர்மானத்தின்படியே சேத்தியாத்தோப்பு பேரூராட்சி பேருந்து நிலையத்திலுள்ள பேரூராட்சிக்குச் சொந்தமான 23 கடைகளும் மறுஏலம் விடப்பட்டுள்ளது என்பதும் இதனால் பேரூராட்சிக்கு சுமார் ரூ. 16.50 இலட்சம் கூடுதல் வருமானம் கிடைத்துள்ளது என்பதும் மனுதாரரின் கடை மறு ஏலத்தில் அதிக ஏலத்தொகைக்கு கோரப்பட்டு உறுதிசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும் அரசாணை மற்றும் பேரூராட்சி மன்றத் தீர்மானத்தின்படியே ஏலம் விடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சேத்தியாதோப்பு செயல் அலுவலர் தெரிவித்திருப்பது ஏற்புடையதல்ல. அரசாணை(நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள் 03.07.2007ன்படி ஏலம் விடப்பட்ட வருடத்திலிருந்து 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை 15% உயர்த்தி 9 ஆண்டுகள் வரை கடை ஒப்பந்தம் செய்யப்படவேண்டும். பின்னர், குத்தகை வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும். தற்போதைய குத்தகைதாருக்கு அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையிலான திருத்தியமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில் பெற்றுக்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகை காலஅளவில் நீட்டித்துக் கொள்ள முன்னுரிமை அளிக்கலாம். அவர் ஒப்புக் கொள்ளவில்லையானால் பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விட வேண்டும். ஆனால் இந்நேர்வில் அரசாணை மீறப்பட்டு, விதிமுறைகள் பின்பற்றப்படாமல் சரியான வழிகாட்டுதல் குறிப்பிடாமல் மன்றத்தில் வைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வாறு தவறாக மன்றத்திற்கு வழிகாட்டியிருக்கும் செயல் அலுவலரின் செயல் கண்டிக்கத்தக்கது. அரசாணையின்படி கடையின் முன்னாள் ஒப்பந்தாருக்கு

முன்னுரிமை அளிக்கப்பட்டதாகவோ, அவர் ஒப்புக்கொள்ளவில்லை என்ற விவரமோ செயல் அலுவலரின் அறிக்கையில் இல்லை. இதிலிருந்து செயல் அலுவலரின் நோக்கம் கடை 23–ன் குத்தகைதாரரை ஒதுக்கி, மாற்று நபருக்கு குத்தகை வழங்கப்பட வேண்டுமென்ற உள்நோக்கம் தெரிகிறது.

மேலும் சேத்தியாத்தோப்பு செயல் அலுவலர் தமது 02.06.2023 நாளிட்ட கடிதத்தில் பேருந்து நிலைய கடை எண்.23–ஐ திரு. ம. அருள்நிதியிடமிருந்து பேரூராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைப்பு செய்ய முறைமன்றத்திடம் உத்தரவு வழங்க கோரியிருப்பது இம்முறைமன்றத்தின் மாண்பைக் குறைக்கும் செயலாகக் கருதி சேத்தியாதோப்பு செயல் அலுவலரை இம்முறைமன்றம் கடுமையாக எச்சரிக்கிறது. முன்னாள் குத்தகைதாரரை அரசாணைக்கு முரணாக ஒதுக்கிய செயல் அலுவலருக்கு கடையின் உரிமையை எப்படி திரும்பப் பெறுவது என்பது தெரியாமல் போனது விந்தையே. முன்னாள் குத்தகைதாரரிடமிருந்து கடையின் உரிமையை எப்படி பெறுவது என்ற சாதாரண நடைமுறைகள் கூட அறியாத செயல் அலுவலர் இவரே என இம்முறைமன்றம் முடிவு செய்கிறது. எனவே அரசாணை (நிலை) எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 3.7.2007–ல் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றாமல் குத்தகை வழங்க தவறான வழிமுறைகளைப்பின்பற்றி பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றிய சேத்தியாத்தோப்பு பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவுசெய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

இனிவருங்காலங்களில் கடைகள் குத்தகைக்கு விடப்படும் நேர்வுகளில் அரசாணை (நிலை) எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி–4)துறை, நாள் 03.07.2007ல் வெளியிடப்பட்டுள்ள நடைமுறைகளை தவறாது பின்பற்ற வலியுறுத்தி, அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்புமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும், இந்நேர்வில் மனுதாரர் திரு. ம. அருள்நிதி அவர்களுக்கு கடை எண்.23–ஐ, 2001–2002ஆம் ஆண்டு ஏலம்விடப்பட்டு, உணவகம் நடத்திவந்துள்ளார். மனுதாரர் வாடகைத் தொகையை உரிய காலத்திற்குள் செலுத்தாத காரணத்தால் 2009–2010ஆம் ஆண்டு பேரூராட்சி நிர்வாகத்தால் கடை ஜப்தி செய்யப்பட்டு, பின்னர் 5.2.2010 அன்று ஏலம் விடப்பட்டதில் மீண்டும் மனுதாருக்கே குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இந்நிலையில் விதிகளின்படி அனைத்து கடைகளும் புதிதாக ஏலம் விடப்பட வேண்டுமென பேரூராட்சி நிர்வாகத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 24.03.2023 அன்று பொதுஏலம் நடத்தலாமென முடிவு செய்யப்பட்டு, கடைநடத்திவந்த அனைத்து நபர்களிடமும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. ஆனால் 24.3.2023 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் மனுதாரர் கலந்து கொள்ளாததால் உயர்ந்த தொகைக்கு ஏலம்கோரிய நபரான திரு.இ.விக்னேஷ் என்பவருக்கு ஏலம் உறுதிசெய்யப்பட்டு, 01.04.2023 முதல் கடையை ஒப்படைக்க வேண்டுமென

அறிவுறுத்தப்பட்டது. எனினும் மனுதாரர் கடையைப்பூட்டி சாவியை நாளது தேதிவரை பேரூராட்சியில் ஒப்படைக்காதது மிகவும் கண்டிக்கத்தக்கது. 2001–2002 ஆம் ஆண்டு முதல் கடையை தொடர்ச்சியாக 9 ஆண்டுகள் ஏலம் எடுத்து நடத்தி, உரிய காலத்தில் வாடகை செலுத்தாத காரணத்தால் பேரூராட்சியால் 2009–2010 ஆம் ஆண்டு ஜப்தி செய்யப்பட்டு, 5.2.2010ல் நடைபெற்ற ஏலத்தில் மீண்டும் மனுதாரருக்கே குத்தகை விடப்பட்டுள்ளதும் பின்னர் 24.03.2023 அன்று நடைபெறவிருந்த பொதுஏலத்தில் கலந்துகொள்ள வாய்ப்பளித்தும், அதில் கலந்து கொள்ளாமல் புதிதாக ஏலம் எடுத்த நபரிடம் கடையை ஒப்படைக்கும் நோக்கில் கடையின் சாவியை நிர்வாகத்திடம் ஒப்படைக்க அறிவுறுத்தியும் பேரூராட்சி நிர்வாகத்திடம் சாவியை ஒப்படைக்காமல், கடையை தமக்கே குத்தகைக்கு தரக்கோரி இம்முறைமன்றத்திடம் நிவாரணம் கோருவதற்கு மனுதாரர் தகுதியற்றவர் ஆவார் என இம்முறைமன்றம் கருதுகிறது.

2023– ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 11 – ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. M.அருள்நிதி ,
கும்பகோணம் மெயின்ரோடு,
அள்ளூர், சேத்தியாத்தோப்பு அஞ்சல்,
சிதம்பரம் வட்டம்,
கடலூர் மாவட்டம் –608 702

2) செயல் அலுவலர்,
சேத்தியாத்தோப்பு பேரூராட்சி,
கடலூர் மாவட்டம்–608 702

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர்நிர்வாக அலுவலக வளாகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்) பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

2/9/23